ஒக்கூர் ஊராட்சிமன்றத் தலைவர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திருமதி. அ.பூமா

நாள் : 01.07.2024

பொருள் : மனையிடம் - குடியிருப்பு மனைப்பிரிவு - சிவகங்கை ஊராட்சி ஒன்றியம் - ஒக்கூர் ஊராட்சி - ஒக்கூர் கிராமம் சர்வே எண்கள் 426/3A2A,3A2B,3A2C - ல் கட்டுப்பட்ட இடத்தில் 8760.29 சதுரமீட்டர் மனைப்பரப்பில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கான இடத்திற்கு ஒப்புதல் - வழங்குவது தொடர்பாக.

பார்வை : 1. மாவட்ட நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் சிவகங்கை அவர்களின் தொழில்நுட்ப கடித எண். ROC No.SWP-7TSNSBRZ/2024/TCP

உத்தரவு :

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஊராட்சி ஒன்றியம், ஒக்கூர் ஊராட்சி,ஒக்கூர் கிராமத்தில் சர்வே எண்கள். 426/3A2A, 3A2B, 3A2C - ல் கட்டுப்பட்ட மொத்தப்பரப்பு 13100 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட இடத்தில் சாலை ஒதுக்கீடு, மின் வாரிய ஒதுக்கீடு மற்றும் ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடம் நீங்கலாக மனைபிரிவில் அமைந்துள்ள 8760.29 சதுரமீட்டர் பரப்பளவில் ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை 49, மேற்படி மனையிட வரைபடத்திற்கு பார்வை (1) ல் கண்டுள்ள சிவகங்கை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படியும், மனைப்பிரிவிற்கு கோரப்பட்டுள்ள நிபந்தனைகளின்படியும் , மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளையும், மற்றும் உள்ளாட்சிக்கு ஒதுக்கப்பட்ட இடம் இவைகளை மதகுப்பட்டி சார்பதிவகம் 1 புத்தகம் ஆவண எண். 182/2024 ஊராட்சிக்கு தானமாகபதிவு செய்யப்பட்டு, மேற்படி ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் மனுப்பிரிவிற்கு கூராய்வுக் கட்டணமாக ரூ.49000.00 நிலப்பயன் மாற்று கட்டணமாக ரூ.212200.00 மேற்படி ஒக்கூர் ஊராட்சி இந்தியன் வங்கி கணக்கு எண்ணில் ரொக்கமாக செலுத்தப்பட்டுள்ளது.

சிவகங்கை நகர் ஊரமைப்புத்துறையின் மனைப்பிரிவு ஒப்புதல் எண். LP(SWP)/DTCP/SIVAGANGAI - NO. 07/2024 - ன் படி மேற்படி மனைப்பிரிவு ஊராட்சி ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவில் உள்ள மனைகள் (மனை எண்.1 முதல் மனை எண்.49 வரை மொத்த மனைகள் 49க்கும்) நிபந்தனைகளுக்கு உட்பட்டு முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

தலைவர்-
ஒக்கூர் ஊராட்சி

இணைப்பு :

வரைபடம் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள்

நகல் :

1. சார்பதிவாளர் மதகுபட்டி ,
   சார்பதிவாளர் அலுவலகம்,
   சிவகங்கை மாவட்டம்.

2. சு.லெட்சுமணன் , சு. தங்கமணி ,சுந்தரம்,
   1/170, சசிவர்ண விநாயகர் கோவில் மெயின் ரோடு,
   ஒக்கூர்,
   சிவகங்கை.

3. Chairperson,tamilnadu Real Estate Regulatory Authority,
   (TNRERA) CMDA Tower II, Ist floor no.1A,
   Egmore , Chennai -600008.

4. வட்டாட்சியர்,
   சிவகங்கை வட்டாட்சியர் அலுவலகம்,
   சிவகங்கை மாவட்டம்.